தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 54/மா/2024**

**நாள்: 23.04.2025**

| | | |
|---|---|---|
| திரு. இ. தாஹர் ஷெரீஃப்<br>காயல்பட்டிணம்<br>தூத்துக்குடி மாவட்டம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தூத்துக்குடி மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணம், குத்துக்கல் தெரு, எண் 83/31 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவரின் 11.05.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.05.2024 அன்று பெறப்பட்டு 54/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணம், குத்துக்கல் தெரு, எண் 83/31 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனது தாயார் ஆயிஷா பீவீ அவர்கள் தூத்துக்குடி 19 வடக்கு ராஜா தெருவில் குடியிருந்து வந்தார்கள். அதே முகவரியில் வீட்டில் வைத்து 19.12.1994 அன்று இறந்து விட்டார்கள். எனது தாயாரின் இறப்பை நகராட்சியில் பதியவில்லை. 12.2.2024 அன்று எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் கேட்டு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு செய்தேன். மனுவுடன் நோட்டரி பப்ளிக் பாண்டு பத்திரம் (2) தூத்துக்குடி ஜாமியா பள்ளிவாசல் இறப்பு சான்று நகல் (3) சாட்சிகள் இரண்டு பேர்களின் மனுவுடன் ஆதார் நகல் (4) இதனுடன் நகராட்சியில் ரூ.100 பணம் கட்டிய நகல், இவ்வளவு சேர்த்து தூத்துக்குடி மாநகராட்சியில் கொடுத்துள்ளேன். இதுநாள் வரை எனக்கு என் தாயாரின் இறப்பு சான்றிதழ் கிடைக்கவில்லை. என்னுடைய தகப்பனாரின் சொத்து பங்கீடு செய்வதற்கு வாரிசு சான்று வேண்டும். அந்த வாரிசு சான்று வாங்குவதற்கு என்னுடைய அம்மாவின் இறப்பு சான்று வேண்டும். இந்த இறப்பு சான்று வாங்க நான் ரொம்ப கஷ்டப்படுகிறேன். இதுநாள் வரை இறப்பு சான்று கிடைக்கப் பெறவில்லை. இதனால் எனக்கு மன உளைச்சல், போக்குவரத்து செலவு, அலைக்கழிப்பு, நேரம் விரயம், உடல்நலம் பாதிப்பு மற்றும் மற்ற வேலைகள் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, என் தாயாரின் இறப்பு சான்றிதழ் கிடைக்க ஆவன செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 29.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 11.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“மனுதாரர் திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவர் தனது தாயார் திருமதி ஆயிஷா பீவி அவர்கள் கதவு எண்.19, வடக்கு ராஜா தெரு, தூத்துக்குடி என்ற முகவரியில் வைத்து 19.12.1994 அன்று இறந்த நிகழ்வை தூத்துக்குடி மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறியதால், இறப்பு பதிவில்லாச் சான்று வழங்கும்படி 19.02.2024ல் விண்ணப்பித்துள்ளார். மேற்படி கோப்பின் மீதான நடவடிக்கையில் மனுதாரர் பதிவேடு தேடுதல் கட்டணம் ஆண்டிற்கு ரூ.100/– வீதம் ரூ.3000/–ஐ தூத்துக்குடி மாநகராட்சி கருவூலத்தில் 30.05.2024 அன்று செலுத்தி ரசீது சமர்ப்பித்துள்ளார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் 324 நாள் 28.06.2023ல் காலதாமதம் பிறப்பு / இறப்பு பதிவுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறையில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து பதிவில்லா சான்று பெற்று, வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு பெற்று பிறப்பு / இறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு பிறப்பு / இறப்பு விதிகள் 2000 (see Rule 13)–ன்படி இவ்வலுவலகம் மூலம் 03.06.2024ல் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு பதிவில்லா சான்று மனுதாரர் வசம் இவ்வலுவலகம் மூலம் நேரில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரிடம் இறப்பு பதிவில்லாச் சான்று உரிய ஆவணங்கள் இணைத்து, தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியருக்கு விண்ணப்பித்து, மேற்படி நபர் இறப்பினை உறுதி செய்து தூத்துக்குடி மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் இறப்பு பதிவு செய்ய உத்தரவு பெற்று வரும் நிலையில், மேற்கண்ட உத்தரவின்படி தூத்துக்குடி மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்து சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நேரில் விவரமும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் வருவாய் கோட்டாட்சியரிடம் இறப்பு பதிவிற்கான உத்தரவு பெற்று, மேற்கண்ட உத்தரவினை தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில், உரிய இறப்பு பதிவு செய்து சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.” என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் 17.03.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மனுதாரர் 12.03.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

“எனது தாயாரின் இறப்பு பதிவு சான்றிதழ் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிய எனது விண்ணப்ப மனுவின் நாள் 11.05.2024. நான் தற்பொழுது மேற்கண்ட புதிய முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனது தாயாரின் இறப்பு சான்று காலதாமதம் குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற எண்ணத்தின் காரணமாக தங்கள் அலுவலகத்திற்கு புகார் முறையீட்டு மனு அனுப்பினேன். இப்பொழுது தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகம் எனக்கு 18.02.2025 அன்று என் தாயாரின் இறப்பு

சான்றிதழ் வழங்கி விட்டார்கள். ஆகையினால், நான் தங்களுக்கு அனுப்பிய புகார் மனுவை திரும்ப (வாபஸ்) பெற்றுக் கொள்கிறேன். இந்த வாபஸ் மனுவை ஏற்றுக் கொண்டு பதில் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என்னுடைய அம்மாவின் இறப்பு சான்று நகல் இணைத்துள்ளேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

**6.** மேலும், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது **13.03.2025** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

''திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவரது புகார் மனுவில், தனது தாயார் திருமதி ஆயிஷா பீவி அவர்கள் கதவு எண் 19, வடக்கு ராஜா தெரு, தூத்துக்குடி என்ற முகவரியில் வைத்து **19.12.1994** அன்று இறந்து விட்டதாகவும், அன்னாரின் இறப்பு சான்று கோரி **12.02.2024** அன்று தூத்துக்குடி மாநகராட்சி அலுவலத்தில் விண்ணப்பம் செய்தும், இதுநாள் வரை தனது தாயாரின் இறப்பு சான்று கிடைக்கவில்லை. ஆதலால் தனது தாயாரின் இறப்பு சான்றிதழ் கிடைக்க ஆவன செய்திட வேண்டி புகார் மனு சமர்ப்பிக்கப்பட்டது.

இப்புகார் மனு தொடர்பாக, மனுதாரர் கோரிய திருமதி ஆயிஷா பீவீ என்பவரின் இறப்பு பதிவில்லாச் சான்று இவ்வலுவலகம் மூலம் **03.06.2024–ல்** மனுதாரர் வசம் நேரில் வழங்கப்பட்ட விவரத்தினை இவ்வலுவலக **11.09.2024–ம்** தேதிய பாதுகாப்பு அறிக்கை வாயிலாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண் ப.மு.(அ4)/2496/2024 நாள் 24.01.2025–ன்படி, மனுதாரர் திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவர், தனியரின் தாயார் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு பதிவினை தூத்துக்குடி மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவு செய்து இறப்பு சான்று வழங்கிட உத்திரவிடப்பட்டு, அதன்பேரில் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு பதிவினை மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு **18.02.2025–ல்** திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு சான்று மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

7. எனவே, மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரும் **17.03.2025** அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**8.** இந்நிலையில், மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது **12.03.2025** நாளிட்ட கடிதம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் **11.09.2024** மற்றும் **13.03.2025** நாளிட்ட அறிக்கைகள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தாயாரின் இறப்பு பதிவு சான்றிதழ் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய மனுவின் அடிப்படையில், இப்பொழுது தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகம் தனக்கு **18.02.2025** அன்று தன் தாயாரின் இறப்பு சான்றிதழ் வழங்கி விட்டார்கள் எனவும், ஆகையினால், தான் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிய புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாகவும், இதனை ஏற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்த நிலையில், தூத்துக்குடி உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறை ஆணையின்படி, மனுதாரர் திரு.இ.தாஹர் ஷெரீஃப் என்பவரின் தாயார் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு பதிவினை தூத்துக்குடி மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவு செய்து இறப்பு சான்று வழங்கிட உத்திரவிடப்பட்டு, அதன்பேரில் மனுதாரரின் தாயார் திருமதி ஆயிஷா பீவி இறப்பு பதிவினை மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு **18.02.2025ல்** இறப்பு சான்று மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின்அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கோரியவாறு அன்னாரின் தாயார் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு சான்றிதழ் தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்பட்டு விட்டதாலும், மனுதாரரும் தன்னுடைய **12.03.2025** நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தனது தாயார் திருமதி ஆயிஷா பீவி என்பவரின் இறப்பு சான்று கிடைக்கப் பெற்றது எனவும், தன்னுடைய மனுவை திரும்ப பெறுவதாகவும் தெரிவித்த நிலையில், மனுதாரரின் **11.05.2024** நாளிட்ட முறையீட்டு மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என இம்முறை மன்றம் கருதி அவ்வாறே இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. இ.தாஹர் ஷெரீஃப்,
த/பெ.இப்ராஹீம் ஷெரீஃப்,
எண்.31/993A பெல் அமோஸர்ஸ் காலனி,
ரஹ்மத் நகர் முதல் தெரு, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி–627 002.

2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

25/4/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032